# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/40 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා — 1976.12.17

243/40 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (70)/76.

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மேல், சனாதிபதியவர்களினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

கொழும்பு,
1976, திசெம்பர் 17.

### ஒழுங்குவிதிகள்

1\. (i) இவ்வொழுங்கு விதிகள், அவசரகால (உணவுப் பயிர்களைப் பயிரிடுதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(ii) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது ஏதேனும் கமத்தொழிற் காணியைப் பயிரிடுதல் தொடர்பிலான ஏதேனும் வழமையில் ஏது எவ்விதமிருப்பினும், இவ்வொழுங்கு விதிகள் பயனுடையனவாதல் வேண்டும்.

2\. (i) பயிரிடப்படாத அல்லது பூரணமாகப் பயன் பெறத்தக்க வகையில் பயிரிடப்படாத ஏதேனும் கமத்தொழிற் காணியின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், இதற்கான அட்டவணையிற் குறிப்பீடு செய்யப்பட்ட உணவுப் பயிர்களை, அது தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரியினால் விதிக்கப்படக்கூடிய பணிப்புக்கிணங்க, அத்தகைய காணியில் பயிரிடுதல், அவரது கடமையாதல் வேண்டும்.

எனினும் பயிரிடப்படாத அல்லது பூரணமாகப் பயன் பெறத்தக்க வகையில் பயிரிடப்படாத ஏதேனும் கமத்தொழிற் காணியின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், தகுதிவாய்ந்த அதிகாரியினது எழுத்திலான அனுமதியுடன் அத்தகைய காணியில், கமத்தொழிற் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் பயிரைப் பயிரிடலாம்.

(ii) ஓராம் பந்தியின் கீழ் வழங்கப்படும் பணிப்புகள் எவையும், அத்தகைய பணிப்பு கமத்தொழிற் காணியின் சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் கடைசியாக அறியப்பட்ட முகவரிக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படின், அத்தகைய சொந்தக்காரரிடம் அல்லது இருப்பாட்சியாளரிடம் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின், எப்படியிருப்பினும், அத்தகைய காணிக்குப் பல சொந்தக்காரர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் இருக்குமிடத்து, அல்லது அத்தகைய காணியின் சொந்தக்காரர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் யாரென நிச்சயிக்க முடியாதிருக்குமிடத்து, அத்தகைய பணிப்பு, எக்கமத் தொழிற் காணி தொடர்பிலானதோ அக்கமத்தொழிற் காணியில் அல்லது அதன்மீது துலாம்பரமானவோர் இடத்தில் அத்தகைய பணிப்பை வெளிக்காட்டிவைத்தல் மூலம், விடயத்துக்கேற்ப, அத்தகைய காணியின் எல்லாச் சொந்தக்காரர்களிடமும் அல்லது இருப்பாட்சியாளர்களிடமும் போதிய முறையில் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

3\. கமத்தொழிற் காணியெதுவும், 2 ஆம் ஒழுங்கு விதியின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய எவையேனும் பணிப்புகளுக்கிணங்கப் பயிரிடப்படவில்லையெனத் தகுதிவாய்ந்த அதிகாரி திருப்திப்படுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரியினாற்றீர்மானிக்கப்படக் கூடியவாறான நியாயமான ஒரு நில வாடகையை அல்லது பயிரின் நியாயமான ஒரு பங்கை—பயிரின் பங்கைப் பெற விரும்புகின்றாரா அல்லது நில வாடகையைப் பெற விரும்புகின்றாரா எனத் தீர்மானிப்பதற்குச் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் உரித்துடையவராயிருப்பவர்—செலுத்தியதன்மேல் அக்காணியை உடைமையில் எடுப்பதற்கும் அத்தகைய காணியை உடைமையில் எடுக்கும் நோக்கத்துக்காக அவசியமானவை யென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும், எடுப்பதற்கும் அத்தகைய வலுவைப் பயன்படுத்துவதற்கும் தகுதி வாய்ந்த அதிகாரி இத்தால் அதிகாரமளிக்கப்படுகிறார்.

4\. மூன்றும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் கமத்தொழிற் காணியை உடைமையில் எடுப்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவர் அதனை உடைமையில் எடுப்பதற்கு முன்னர், காணியை ஏன் கையேற்கக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு அத்தகைய காணியின் சொந்தக்காரரை அல்லது இருப்பாட்சியாளரைக் கோரலாம் என்பதுடன், போதியதானதெனத் தகுதிவாய்ந்த அதிகாரிக்குத் தோற்றும் காரணத்தைச் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் காட்டி, காணியானது தகுந்த முறையிலும் ஒழுங்காகவும் பயிரிடப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக விதித்தல் அவசியமானவையெனத் தகுதிவாய்ந்த அதிகாரி எண்ணக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கிணங்கியொழுகுவதாகத் தகுதிவாய்ந்த அதிகாரி திருப்திப்படும்படி எழுத்திலான பொறுப்பேற்பொன்றைச் செய்து கொள்ளுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அத்தகைய காணியை உடைமையில் எடுக்காதும் விடலாம்.

5\. மூன்றும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளைப் பின்பற்றித் தகுதிவாய்ந்த அதிகாரி கமத்தொழிற் காணியொன்றை உடைமையில் எடுத்துள்ளவிடத்து—

(அ) அக்காணியைப் பயிரிடுவிக்கும் நோக்கத்துக்காக அவர் அதனை அவ்வாறு உடைமையில் எடுத்துள்ளாரென அவரது கைப்பட எழுத்திலான சான்றிதலொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் காணிச் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு அத்தகைய சான்றிதழை ஒப்படைத்தலும் வேண்டும் அல்லது காணியின்மீது துலாம்பரமானவோர் இடத்தில் அதனை வெளிக்காட்டி வைப்பித்தலும் வேண்டும்.

(ஆ) (i) அவரது தற்றுணிபின்படி அவர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலத்தின் போது, தகுதியானவரென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஆளைக் கொண்டு அல்லது ஆட்களைக் கொண்டு காணியை அவர் பயிரிடுவிக்கலாம்; அத்துடன்

(ii) காணியானது தகுந்த முறையிலும் ஒழுங்காகவும் பயிரிடப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக விதித்தல் அவசியமானவையெனத் தகுதிவாய்ந்த அதிகாரி எண்ணக்கூடியவாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கிணங்கியொழுகுவதாகச் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் தகுதிவாய்ந்த அதிகாரி திருப்திப்படும்படி பொறுப்பேற்பொன்றைச் செய்துள்ள சந்தர்ப்பமொன்றில், சொந்தக்காரருக்கு அல்லது முன்னைய இருப்பாட்சியாளருக்கு அக்காணியின் உடைமையை எந்நேரத்திலும் திருப்பிக் கொடுக்கலாம்.

6. இந்த ஒழுங்குவிதிகளின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் நிறைவேற்றப்பட்ட எழுத்திலான பொறுப்பேற்பு ஒவ்வொன்றும்—

(அ) முத்திரை வரியில்லாதிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய பொறுப்பேற்பு, உரிமமளிக்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகள் ஆகியோர் முன்னிலையில் ஒப்பமிடப்படாவிடினும், அதன் நிறைவேற்றல் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்படாவிடினும், வலுவும் பயனுமுள்ளதாதல் வேண்டும்.

ஆவணங்களைப் பதிவு செய்தல் கட்டளைச்சட்டத்தை ஏற்புடைத்தாக்கும் நோக்கங்களுக்காக, அத்தகைய எழுத்திலான பொறுப்பேற்பு ஒவ்வொன்றும், அந்தப் பொறுப்பேற்பு தொடர்பிலான காணியைப் பாதிக்கும் ஒரு சாதனமாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், தகுதிவாய்ந்த அதிகாரியினால் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் பதிவு செய்யப்படுவதற்காகச் சமர்ப்பிக்கவும்படலாம்.

ஆயின், எவ்வாறுயினும், அந்தக் கட்டளைச்சட்டத்திலுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய ஏதேனும் பொறுப்பேற்பைப் பதிவு செய்தலுக்காக அல்லது அதன் தொடர்பில், அந்தக் கட்டளைச்சட்டத்தின் கீழ்க் கட்டணமெதுவும் செலுத்தப்படற்பாலதாகாது.

7. தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் தமது அதிகாரத்தின் கீழுள்ள இடப்பரப்புக்குள் அமைந்துள்ள ஏதேனும் கமத்தொழிற் காணிக்குள் புகுந்து பார்வையிடுவதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்.

8. இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் தகுதிவாய்ந்த அதிகாரியினால் தமக்களிக்கப்பட்ட எல்லா அறிவுறுத்துரைகளையும் நிறைவேற்றுதல் அத்தகைய காணி எந்தப் பொலிசு நிலையப் பொறுப்பலுவலரின் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் அதிகாரத்தின் கீழுள்ள இடப்பரப்புக்குள் அமைந்துள்ளதோ அந்தப் பொலிசு நிலையப் பொறுப்பலுவலரது அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியது கடமையாதல் வேண்டும்.

9. எவரேனும் ஆள், இந்த ஒழுங்கு விதிகளில் எவற்றையேனும் மீறுமிடத்து அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அவர் ஒரு தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் முன்னிலையிலான விசாரணையின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

10. இந்த ஒழுங்குவிதிகளில்—

" கமத்தொழிற் காணி " என்பது, இந்த ஒழுங்குவிதிகளின் கருத்தெல்லைக்குட்படக் கமத்தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படத்தக்கதான காணி எனப் பொருள்படும்.

" கமத்தொழில் " என்பது—

(i) நெல், சகல வயற் பயிர்கள், வாசனைத்திரவியங்கள், வாசனைச் சரக்குகள், கைத்தொழிற் பயிர்கள், காய்கறிகள், பழங்கள், பூக்கள், மேய்ச்சற்புல், புற்றரை, இதற்கான அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள உணவுப் பயிர்கள் என்பவற்றை வளர்த்தலையும் ;

(ii) பாற்பண்ணை, கால்நடை வளர்ப்பு, கால்நடை இன விருத்தி என்பவற்றையும் ;

(iii) தாவர, பழமர நாற்றுமேடைகளையும்,

உள்ளடக்கும்.

" தகுதிவாய்ந்த அதிகாரி " என்பது, அத்தகைய காணி எந்த நிருவாக மாவட்டத்துள் அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருள்படும் ;

" இருப்பாட்சியாளர் " என்பது ஏதேனும் கமத்தொழிற் காணியில் இருப்பாட்சி கொண்டிருக்கும் அல்லது அதனை உடைமை கொண்டிருக்கும் ஆள் என்று பொருளாவதோடு—

(அ) குத்தகை பெற்றவர் என்ற தன்மையில் அல்லது ஒற்றியீடு பெற்றவர் என்ற தன்மையில் ஏதேனும் கமத்தொழிற் காணியைப் பயன்படுத்துவதற்கும் அதில் இருப்பாட்சி கொண்டிருப்பதற்கும் அப்போதைக்கு உரித்துடைய ஆளையும் ;

(ஆ) காணியபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ், முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தின் கீழ்ப் பராதீனப்படுத்தப்பட்ட கமத்தொழிற் காணியைப் பயன்படுத்துபவராயும் அதில் இருப்பாட்சி கொண்டிருப்பவராயும் உள்ள எவரேனும் ஆளையும்

உள்ளடக்கும்.

" காணிச் சொந்தக்காரர் " என்பது, கூட்டுச்சொந்தக்காரரையும் உள்ளடக்கும்.

" ஆள் " என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவையும் உள்ளடக்கும்.

" பூரணமாகப் பயன்பெறத்தக்கவகையிற் பயிரிடப்படாத கமத்தொழிற் காணி " என்பது, தகுதி வாய்ந்த அதிகாரியினது அபிப்பிராயப்படி அட்டவணையிற் குறிப்பிடப்பட்ட பயிர்களின் விளைத்திறன் தொடர்பாக போதியளவிற் பயிரிடப்படாத காணி என்று பொருளாகும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| நெல் | நிலக்கடலை |
| மரவள்ளிக்கிழங்கு | பாசிப்பயறு |
| வத்தாளைக்கிழங்கு | மக்காச் சோளம் |
| டயஸ்கோரியா | சோளம் |
| அலோகேசியாஸ் | சோயா அவரை |
| கொலகேசியாஸ் | மஞ்சள் |
| மிளகாய் | எள்ளு |
| வெங்காயம் | வாழைப்பழ வகை |
| கொம்புப்பயறு | தினை, சாமை முதலியன |
| துவரம்பருப்பு | உளுந்து. |
| குரக்கன் | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது